**சோலார் மின்சாரம்**

கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்

தொடர்புக்கு 96005 48581



நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்

www.SAKKRAVIYUGAM.com



TAMIL PRESS CLUB தமிழ் பிரஸ் கிளப் Reg.No: 12/2013

தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...

ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட

88705 00000 99446 16559



Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 168 12.12.2025 FRIDAY KARTHIGAI : 25 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 168 12.12.2025 வெள்ளிக்கிழமை கார்த்திகை : 25 விலை : ரூ.5/-



3 3.2 லட்சம் ஓட்டுகள் த.வெ.க.,வில் 'கன்பார்ம்': அடையாள அட்டைகளால் கட்சியினர் மகிழ்ச்சி

4 மதுரை பாரதியார் சிலைக்கு வழிகாட்டி மனிதர்கள் அறக்கட்டளை சார்பில் மாலை அணிவித்து மரியாதை

2 உறைபனியால் காஷ்மீராக மாறும் கொடைக்கானல் இரவில் மக்களை வாட்டும் கடுங்குளிர்


# 2027ல் குலசேகரப்பட்டினத்தில் இருந்து ராக்கெட்டுகள் ஏவப்படும்: இஸ்ரோ தலைவர் தகவல்

திருநெல்வேலி: டிச.12-

2027 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் குலசேகரப்பட்டினத்தில் இருந்து ராக்கெட்டுகள் ஏவப்படும். ககன்யான் விண்கலத்தை 2027 ல் விண்ணுக்கு அனுப்ப இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என இஸ்ரோ தலைவர் நாராயணன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் இஸ்ரோ தலைவர் நாரயணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ககன்யான் திட்டம் என்பது நாம் தயாரிக்கும் ராக்கெட் மூலம் இந்திய விண்வெளி வீரர்களை விண்ணுக்கு வெற்றிகரமாக அனுப்பி, அவர்களைப் பத்திரமாகத் திரும்பக் கொண்டு வருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ககன்யான் திட்டத்துக்கான ராக்கெட் தயாரிப்புப் பணிகள் முழு அளவில் நடந்து வருகிறது. விண்வெளியில் விண்வெளி வீரர்களுக்குத் தேவையான வெப்பநிலை, அழுத்தம், கார்பன் டை ஆக்சைடு, ஆக்ஸிஜன் மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் அமைப்பின் மேம்பாட்டுப் பணிகளும்




சிறப்பாக நடைபெறுகின்றன.

ராக்கெட் ஏவுதலின்போது ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால், விண்வெளி வீரர்களின் உயிரைப் பாதுகாக்க, அவர்களைப் பத்திரமாக வெளியேற்றும் அமைப்பின் பணியும் மிகவும் வெற்றிகரமாக முடிந்துள்ளது. இத்திட்டத்துக்காகக் கிட்டத்தட்ட 8,000 பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

மனிதர்களை ஏற்றிய ககன்யான் விண்கலத்தை 2027 ல் விண்ணுக்கு அனுப்ப இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக ஆட்கள் இல்லாத மூன்று பரிசோதனை ராக்கெட்டுகள் அனுப்பப்பட உள்ளன.

பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் அறிவிப்புக்கு இணங்க, 2035க்குள் இந்திய விண்வெளி நிலையம் அமைக்கப்படும். இந்த விண்வெளி நிலையம் மொத்தம் ஐந்து தொகுதிகளாக உருவாக்கப்படும். முதல் தொகுதி 2028ல் விண்ணுக்கு அனுப்பப்படும். இதற்கான ஒப்புதல் கிடைத்து, பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023ல் பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டிய குலசேகரப்பட்டினம் ஏவுதளத்தின் அனைத்துப் பணிகளும் நன்றாக நடைபெற்று வருகின்றன. இது ஸ்ரீஹரிகோட்டாவுக்கு அடுத்தபடியாக, இந்தியாவின் இரண்டாவது ராக்கெட் ஏவுதளமாக அமையும். இந்தத் திட்டம் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா என்று பேசுவதற்குப் பதிலாக, இந்திய நாட்டுக்கான ஒரு முக்கியமான மையமாக பார்க்கப்பட வேண்டும்.

2027 ம் ஆண்டின் தொடக்கத்தில் குலசேகரப்பட்டினத்தில் இருந்து ராக்கெட்டுகள் ஏவப்படும். சந்திரயான்3 நிலவில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது போல, சந்திரயான்4 திட்டமானது நிலவில் தரையிறங்கி, அங்கிருந்து நிலவின் மாதிரிகளை சேகரித்துத் திரும்ப பூமிக்குக் கொண்டு வரும் இலக்குடன் செயல்படும். இதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



## *திசையன்விளை அருகே "ஆயங்குளம் அதிசய கிணற்றுக்கு" தாமிரபரணி வெள்ளநீர் கால்வாய் தண்ணீர் சுற்றுவட்டார விவசாயிகள் மகிழ்ச்சி

திசையன்விளை. டிச.12

நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகே முதுமொத்தன் மொழி ஊராட்சிக்கு உட்பட்ட ஆயன்குளம் அதிசய கிணற்றுற்கு வெள்ளநீர் கால்வாய் வழியே தண்ணீர் வந்தது. இதனால் சுற்றுவட்டார விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கடந்த பருவமழை காலங்களில் உபரியாக வரும் வெள்ளநீரை திசையன்விளை அருகே உள்ள ஆயன்குளம் படுகை நிரம்பியதும் படுகையிலிருந்து அருகே உள்ள கிணற்றுக்கு திருப்பி விட்டனர் .இந்தக் கிணறு வினாடிக்கு சுமார் 3000 மட்டும் கன அடி தண்ணீரை உள்வாங்கியது.

இது குறித்து ஊடகங்கள் வாயிலாக தகவல் அறிந்த தமிழக சபாநாயகர் அப்பாவு மற்றும் அப்போதைய ஆட்சியர் விஷ்ணு ஆகியோர் அதிசய கிணற்றினை பார்வையிட்டு சென்னை ஐஐடி குழுவினரை கொண்டு ஆய்வு செய்தனர்.

ஆய்வின் முடிவில் கிணற்றுக்குள் முழுக்க முழுக்க கால்சியத்தில் (சுண்ணாம்பு) அமைந்த நீரோடைகள் இருப்பதாகவும் இந்த நீரோடைகள் மூலம் கிணறு உள்வாங்கும் நீரானது சுற்றுவட்டாரத்தில் உள்ள 30 கிலோமீட்டர்க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள கிணற்று நீர் மட்டம் உயரவும் , கடலில் உள்ள உப்பு நீர் நிலத்தடி வழியே உட்புகாமலும் தடுப்பதாகவும் ஆய்வு முடிவில் தெரிவித்தனர்.

மேலும் மழைக்காலங்களில் இந்த அதிசயக் கிணறு மூலமாக சேமிக்கப்படும் நீரினை கோடைகாலங்களில் பாசனத்திற்கு பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ள நிலையில் தமிழக அரசு பொதுப்பணித்துறை மூலம் அதற்கென தனி நிதி ஒதுக்கி ஆயன்குளம் படுகையில் இருந்து கிணற்றுக்கு தனி கால்வாய் மற்றும் ஷட்டர் அமைத்து கிணற்றின் சுற்றுப்புறங்களையும் கான்கிரீட் சுபர்கள் அமைத்து பராமரித்து தயார் நிலையில் வைத்திருந்தது. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் அதிசய கிணற்றுக்கு நீர் செல்லவில்லை. விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

இந்நிலையில் கடந்த வாரம் திணையூரணியில் வெள்ள உபரிநீர் கால்வாய் ஷட்டரை திறந்து வைத்த தமிழக சபாநாயகர் அப்பாவு முதுமொத்தன் மொழி ஊராட்சிக்கு உட்பட்ட ஆயன்குளம் அதிசய கிணற்றுக்கு 300 கன அடி தண்ணீர் வழங்கப்படும் என தெரிவித்தார். விவசாயிகளும் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

வெள்ள நீர் கால்வாய் வழியே நந்தன்குளம், எருமைகுளம் , அவிக்கால்குளம் , ஆயங்குளம் படுகைக்கு வந்த வெள்ள நீரானது இன்று அதிசய கிணற்றுக்குள் அருவி போல் கொட்டியது.

இதனால் சுற்று வட்டார விவசாயிகள் தங்கள் கிணறுகளில் உள்ள நீர்மட்டம் உயர்ந்து விவசாயம் செழிக்கும் மகிழ்ச்சியில் தமிழக அரசுக்கு நன்றியை தெரிவித்துள்ளனர்.


**விளம்பரம் மற்றும் செய்திகள் தொடர்புக்கு : 88705 00000**


## முத்தமிழ் அறிஞர் முன்னாள் முதல்வர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள் மூலம் கிராமங்கள் தோறும் பகுதிநேர நியாயவிலைக் கடைகள்

## கள்ளநாட்டான்பட்டியில் நடைபெற்ற பகுதிநேர நியாயவிலைக் கடை திறப்பு விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

சின்னாளபட்டி டிச 12

முத்தமிழ் அறிஞர் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் செயல்படுத்திய திட்டங்கள் மூலம் கிராமங்கள் தோறும் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் கொண்டுவரப்பட்டது என்று கள்ளநாட்டான்பட்டியில் நடைபெற்ற பகுதிநேர நியாயவிலைக் கடை திறப்புவிழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு, 2006 2011ம் வருடம் கலைஞர் முதல்வராக இருந்தபோது 1 கி.மீ. தூரத்திற்கும் குறைவான தூரம் உள்ள கிராமங்களில் பகுதி நேர நியாய விலைக்கடைகள் திறக்கப்பட்டன என அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் நியாயவிலைக் கடை திறப்பு விழாவில் மறைந்த முன்னாள் முதல்தர் கலைஞருக்கு புகழாரம் சூட்டினார்.





திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட வீரக்கல் ஊராட்சி, கள்ளநாட்டான்பட்டி மற்றும் சீவல்சரகு ஊராட்சியில் நெசவாளர் காலனி, அம்பாத்துரை ஊராட்சி அமலி நகர், பிள்ளையார்நத்தம் ஊராட்சியில் மாதா நகர் ஆகிய பகுதிகளில் பகுதிநேர நியாயவிலைக்கடைகள் திறக்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் ஜி.டி.ஸ்ரீ இராகவ் பாலாஜி தலைமை தாங்கினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், ராமன், இன்பராஜ், பிள்ளையார்நத்தம் முருகேசன், துணைப்பதிவாளர் பொது விநியோகத்திட்டம் எஸ்.டி.கார்த்திகேயன், சரக துணைப் பதிவாளர் கார்த்திக் கௌதம், திண்டுக்கல் மாவட்ட மொத்த கூட்டுறவு பண்டகசாலை செயலாட்சியர் கனகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆத்தூர் வட்டார பொதுவிநியோகத் திட்ட கூட்டுறவு சார்பதிவாளர் அறிவழகன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் நான்கு இடங்களிலும் பகுதிநேர நியாய விலைக்கடைகளை திறந்துவைத்து ரேஷன் பொருட்களை பொதுமக்களுக்கு விநியோகம் செய்த பின்பு அவர் மத்தியில் பேசும்போது இன்று தமிழகத்தில் குக்கிராமங்களில் வசிக்கும் கிராம மக்கள்கூட சிரமமின்றி ரேஷன் பொருட்களை வாங்குகிறார்கள் என்றால், அதற்கு காரணம் மறைந்த முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களே என்றார். தமிழக மக்களின் நலனுக்காக அயராது உழைத்த ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் 2006 ஸ்ரீ 2011 ஆட்சி செய்தபோது ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு நியாயவிலைக்கடை குறிப்பாக பகுதி நேர நியாயவிலைக்கடைகளாவது இருக்க வேண்டும் என்றார். அவர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு,க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் நூறு குடும்பங்கள் இருந்தால்கூட பகுதி நேர நியாய விலைக்கடைகள் திறக்கப்பட்டு பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது. இதன் மூலம் மாதத்தின்; 30 நாட்களும் தங்குதடையின்றி ரேஷன் பொருட்கள் கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது என்றார்.

கடந்த திமுக ஆட்சின்போது 60 வயதைக் கடந்த முதியோர்கள் அனைவருக்கும் உதவித் தொகை வழங்கினோம். அதன்பின்னர் வந்த அதிமுக ஆட்சியில் நிறுத்திவிட்டார்கள். தற்போது மீண்டும் அவர்களுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுபோல மகளிர் உரிமைத் தொகை கிடைக்கப் பெறாதவர்கள் ஆத்தூர் தொகுதியில் மட்டும் சுமார் 10 ஆயிரம் பேர் மனு கொடுத்துள்ளனர். அவர்களில் சுமார் 8 ஆயிரம் முதல் 9 ஆயிரம் பேருக்கு மகளிர் உரிமைத் தொகை 12ம் தேதிமுதல் கிடைக்கப் போகிறது. இதுமட்டுமின்றி பொங்கல் பரிசு உட்பட அனைத்து நலத்திட்டங்களும் மக்கள் நலனுக்காகவே செயல்படுத்திவரும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராடவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை 2026ம் தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் முதல்வர் ஆவார், இது உறுதி என்றார். அதன் பின்னர் நிரூபர்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் 210 தொகுதிகளிலும் அதிமுக கூட்டணி வெற்றிபெறும் என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அதிமுக பொதுக்குழு கூட்டத்தில் அறிவித்திருக்கிறாரே என்று கேட்டபொழுது அதற்கு பதில் அளித்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் 210 இடங்களில் எங்கே அதிமுக போட்டியிடப்போகிறது. அவர்களுக்கு நாங்கள் வெற்றி பெறும் தொகுதி 210 போக 24 தொகுதிகள் வேண்டுமானால் கிடைக்கும், 210 கிடைக்காது என்றார். நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மருதாம்பாள் ஆல்பர்ட். முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், ஊராட்சி குழு உறுப்பினர் பத்மாவதி ராஜகணேஸ், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்பம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்;டி மணி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேஸ், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காணிக்கை சாமி. செல்வி காங்கேயன், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய துணை செயலாளர்கள் ராஜேந்திரன், எம்.சி.பாண்டியன், வசந்தா கென்னடி, மேற்கு ஒன்றிய துணை செயலாளர்கள் கருத்தராஜா, கலாபச்சை, பொருளாளர் தொப்பம்பட்டி கருப்பையா, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் வசந்தகுமார், இராஜகணேஷ், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், அரசு ஒப்பந்தாரர்கள் ஜீசஸ் அகஸ்டீன், மெல்லின், விக்னேஸ்வரன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி.என்.போஸ், சின்னாளபட்டி பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பொறுப்பு குழு உறுப்பினர்கள் கீர்த்தனா, மெடிக்கல் கோபி, முத்துவேல் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் கள அலுவலர்; அம்பிகேஸ்வரன், பித்தளைப்பட்டி கூட்டுறவு சங்க செயலாளர் சுப்பையா, காந்திகிராம கூட்;டுறவு சங்க செயலாளர் மஞ்சமாதா, கூட்டுறவு விற்பனையாளர்கள் பாலாஜி, இன்பராஜ், முருகவேல், அகஸ்டீன், யுவராஜ் உட்பட திமுக நிர்வாகிகள், இளைஞரணியினர் பலர் கலந்து கொண்டனர்.

# தாட்கோ மூலம் பல்வேறு திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு தாட்கோ மூலம் பயனடைந்து வரும் திருப்பூர் மாவட்ட பயனாளிகள் தங்களது நன்றியினை தெரிவித்தார்கள்

## திருப்பூர் மாவட்டத்தில் தாட்கோ சார்பில் 2021 முதல் இதுவரை 2,279 பயனாளிகளுக்கு ரூ.33.10 கோடி மதிப்பீட்டில் அரசு மானியத்துடன் தொழில் தொடங்க பல்வேறு கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது: மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே நிறைந்து மனம் நிகழ்ச்சியின் மூலம் தகவல்

திருப்பூர் மாவட்டத்தில் தாட்கோ சார்பில் 2021 முதல் இதுவரை 2,279 பயனாளிகளுக்கு ரூ.33.10 கோடி மதிப்பீட்டில் அரசு மானியத்துடன் தொழில் தொடங்க பல்வேறு கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே அவர்கள் தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல் படுத்தி வருகிறார் கள். குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக, இலவம் பஞ்சு தொழில், போட்டோ ஸ்டுடியோ, மொபைல் விற்பனை மற்றும் பழுது பார்க்கும் நிலையம், கற்பூரம் தயாரித்தல், வாகன கடன், எலக்ட்ரிக் கடை, தையல் தொழில், உணவகம், மளிகை கடை, ரிப் கட்டிங், செருப்பு தொழில், தளவாடங்கள் கடை, ஆபரண அணிகலன் கடை, கோழி வளர்ப்பு, பிளாஸ்டிக் தயாரிப்பு, லேத் கடை, சி.என்.சி லேத், ஓர்க்சாப், பவர் டில்லர், கோன் ரிவைன்டிங், பி.வி.சி. எலக்ட்ரிக் பேண்ட் தொழில், இரத்த பரிசோதனை நிலையம், கார்மெண்ட்ஸ், நில மேம்பாட்டுத்திட்டம், பனியன் தொழில், பாத்திரக்கடை, ஸ்டிக்கர் கடை, இரசாயனக் கடை, அரிசி வியாபாரம் போன்ற பல்வேறு தொழில் புரிய கடனுதவி பெற்று வாழ்வாதாரத்தில் முன்னேற்றம் அடைந்துள் ளார்கள்.

மேலும், நரிக்குறவர் சமூக மக்களை ஒருங்கிணைத்து பத்திரப்பதிவு அலுவலகத்தின் வழியே 6 சங்கங்கள் உருவாக்கப்பட்டு 119 நபர்களுக்கு தலா ரூ.0.50 இலட்சம் வீதம் வழங்கி அவர்களுடைய தொழிலில் முன்னேற்றம் அடைவதற்கு புதிய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு தூய்மைப்பணியாளர் நல வாரிய திட்டத்தின் வழியே திருப்பூர் மாவட்டத்தில் பணி புரியும் 3401 தற்காலிக தூய்மைப்பணி யாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு தூய்மைப்பணியாளர் நல வாரியத்தின் வழியே 900 தூய்மைப்பணியாளர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை வழங்கப்பட்டு வருகிறது.



தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய திட்டத்தின் வழியே நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள தூய்மைப்பணியாளர்களுக்கு 51 அடுக்கு மாடி குடியிருப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் பணி புரிகின்ற தற்காலிக தூய்மைப்பணியாளர்களுக்கு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் வழியே விபத்து மரண உதவித் தொகையாக ரூ.10.00 இலட்சம், விபத்து ஊனம் உதவித் தொகையாக ரூ.1.00 இலட்சம், இயற்கை மரண உதவித் தொகையாக ரூ.0.25 இலட்சம், திருமண உதவித் தொகையாக ரூ. 5000/ மற்றும் தூய்மைப்பணியாளர் நல வாரிய உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு 10 ஆம் வகுப்பு முதல் கல்லூரி வரை பயில கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு கடனுதவி வழங்கிடும் வகையில் திருப்பூர் மாவட்டத்தில் 111 நபர்களுக்கு ரூ.55 இலட்சத்து 50 ஆயிரம் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 141 தூய்மைப்பணியாளர்களுக்கு ரூ. 70 இலட்ச்சத்து 50 ஆயிரம் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருகிறது. புதிரை வண்ணார் சமூகத்தை சார்ந்த மக்களுக்கு முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் (CM ARISE) வழியே அதிகபட்சமாக ரூ,10.00 இலட்சம் திட்டத் தொகையில் 35 % மானியத்தில் தொழில் தொடங்க கடனுதவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர்கள் சொந்தமாக விவசாய நிலம் பெற்றுக் கொள்ள நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு திருப்பூர் மாவட்டத்தில் 13 பயனாளிகளுக்கு அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் மானியத்துடன் பத்திரப்பதிவு செலவு முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டு மகளிர்களை விவசாயிகளாக உருவாக்க நடைமுறைத் தப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 16 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிருக்கு 6 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாய நிலம் வாங்கிட நடப்பு ஆண்டில் நடவடி க்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், மகளிர் சுய உதவிக்கு ழுக்களுக்கு ரூ.12.00 இலட்சம் திட்டத் தொகையில் அதிகபட்சமாக ரூ.6.00 இலட்சம் மானியத்தில் காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல், அரிசி வியாபாரம், கார்மெண்ட்ஸ், உணவு பதப்படுத்தும் தொழில், மாவு அரைக்கும் தொழில் போன்ற தொழில்களுக்கு பல்வேறு பொருளாதார கடனுதவி வழங்கிட தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில், 2022-2023 ம் ஆண்டில் 68 பயனாளிகளுக்கு ரூ.3.85 கோடி மதிப்பீட்டிலும், 2023-2024 ம் ஆண்டில் 468 பயனாளிகளுக்கு ரூ.11.10 கோடி மதிப்பீட்டிலும், 2024-2025 ம் ஆண்டில் 1604 பயனாளிகளுக்கு ரூ.16.32 கோடி மதிப்பீட்டிலும், 2025 2026 - ம் ஆண்டில் 139 பயனாளிகளுக்கு ரூ.1.83 கோடி மதிப்பீட்டிலும், அரசு மானியத்துடன் பல்வேறு தொழில் தொடங்க கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட மேலாளர், தாட்கோ, அறை எண்.501 மற்றும் 503, 5 வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருப்பூர் அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தொலைபேசி எண் 0421 2971112, அலைபேசி எண் 94450 29552

தாட்கோ மூலம் கடனுதவி பெற்ற திரு.ரங்கசாமி அவர்கள் தெரிவித்ததாவது,

என் பெயர் ரங்கசாமி, நான் திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டம்,



கவுத்தம்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் 10 ஆண்டு காலமாக தினக்கூலியாக ஆட்டோ ஓட்டி வருகிறேன். எங்கள் ஊரில் மக்களுடன் முதல்வன் முகாம் நடைபெற்றது. மக்களுடன் முதல்வர் முகாமில் தாட்கோ மூலம் கடனுதவி வேண்டி மனு அளித்தேன். மனு அளித்த ஒரு மாதத்தில் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.4.35 இலட்சத்திற்கான கடனுதவி ரூ.1.52 இலட்சம் மானியத்தில் வழங்கினார்கள். தினக்கூலியாக ஆட்டோ ஓட்டும் போது மாதம் ரூ.8,000/ சம்பளம் கிடைத்தது. நான் சொந்தமாக ஆட்டோ வைத்து தொழில் செய்து வருவதால் தற்போது மாதம் ரூ.25,000 வருமானம் ஈட்ட வழி வகை செய்யப்பட்டுள்ளது. வங்கி கடன் திருப்பி செலுத்தியது போக மாதம் ரூ.20,000 வருவாய் கிடைக்கும்.

இத்தகைய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து எங்கள் வாழ்கையின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நிறைந்தது மனம் நிகழ்ச்சியின் மூலமாக எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**

# உறைபனியால் காஷ்மீராக மாறும் கொடைக்கானல் இரவில் மக்களை வாட்டும் கடுங்குளிர்

கொடைக்கானல், டிச.12-

கொடைக்கானலில் நடுங்க வைக்கும் உறைபனி, இரவில் வாட்டும் கடுங்குளிரால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. கொடைக்கானலில் வழக்கமாக டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை உறைபனி காலமாக இருக்கும்.

நடப்பாண்டில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பரவலாக மழை பெய்ததால் உறைபனி குறைந்து அடர் பனிமூட்டம் நிலவியது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக வெப்பநிலை வெகுவாக குறைந்து கடும் குளிர் நிலவி வருகிறது.

பகல் நேரத்தில் 16 முதல் 20 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும், இரவில் 10 முதல் 12 டிகிரிக்கும் குறைவான வெப்பநிலையும் நிலவி வருகிறது. இதனால் அதிகாலையில் உறைபனி படர்ந்து புல்வெளிகளில்



வெண்பட்டு போர்த்தி காஷ்மீர் போல காட்சி அளிக்கிறது.

கொடைக்கானல் மேல்மலை, ஏரிச்சாலை, பாம்பார்புரம், பிரையன்ட் பூங்கா மற்றும் ஜிம்கானா மைதானம் உள்ளிட்ட இடங்களில் நேற்று காலை உறைபனி காணப்பட்டது.

திறந்தவெளியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் மீதும் பனி படர்ந்து மூடி இருந்தது. ஏரியின் மேல்பகுதி தண்ணீரில் படர்ந்திருந்த பனிப்படலம் வெயில் பட்டவுடன் ஆவியாக மாறி வெளியேறும் காட்சியை சுற்றுலாப் பயணிகள் பலர் கண்டு ரசித்தனர்.

கிறிஸ்துமஸ் கொண்டாட்டத் துக்காக கொடைக்கானலில் முகாமிட்டுள்ள இஸ்ரேல் உள்ளிட்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்த சூழலை மிகவும் ரசிக்கின்றனர். அதே சமயம், விவசாய நிலங்களில் பனிப்பொழிவால் செடிகள் கருகி வருகின்றன. அதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கொடைக்கானலில் நிலவும் கடுமையான குளிர் காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

# கர்நாடகாவில் மாணவிகளுக்கும் மாதவிடாய் விடுமுறை வழங்க அரசு முடிவு

பெங்களூரு, டிச.12-

கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மாதவிடாய் விடுமுறைக்கு எதிராக வழக்கு நடைபெற்று வரும் நிலையில், அம்மாநில அரசு பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கும் மாதவிடாய் விடுப்பு வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

கர்நாடகாவில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் 18 முதல் 52 வயது வரையிலான பெண் பணியாளர்களுக்கு மாதவிடாய் காலத்தில் மாதம் ஒருநாள் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்க மாநில அரசு கடந்த நவம்பர் 20ம் தேதி உத்தரவிட்டது. இதற்கு எதிராக கர்நாடக ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் தொடர்ந்த வழக்கில், அம்மாநில உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. இந்நிலையில் கர்நாடக அரசின் தலைமை வழக்கறிஞர் சசிகிரண் ஷெட்டி நேற்று நீதிபதி எம்.ஜோதி முன்னிலையில் ஆஜராகி எழுத்துப்பூர்வமான வாதத்தை தாக்கல் செய்தார். அப்போது அவர், ''ஜப்பானில் 1947ம் ஆண்டே மாதவிடாய் காலத்தில் பெண்களுக்கு விடுமுறை அளிக்கும் முறை அமலுக்கு வந்துள்ளது. கர்நாடகாவில் இந்த திட்டம் தற்போதுதான் அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. மகளிரின் நலனை கருத்தில் கொண்டு அரசு மேற்கொண்டுள்ள இந்த கொள்கை முடிவில் தனியார் நிறுவனங்களிடம் அனுமதி கேட்க வேண்டியதில்லை'' என்றார். இதனை ஏற்ற நீதிபதி, இவ்வழக்கின் ஆட்சேப மனுக்கள் மீது விரிவான விசாரணை நடத்த வேண்டியுள்ளது. எனவே வழக்கின் அடுத்தகட்ட விசாரணை வரும் ஜனவரி 20ம் தேதி நடத்தப்படும்'' எனக்கூறி வழக்கை ஒத்திவைத்தார். இந்நிலையில் கர்நாடக அரசு மாதவிடாய் விடுமுறை திட்டத்தை அம்மாநிலத்தில் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவிகளுக்கும் நீட்டிக்க திட்டமிட்டுள்ளது. இதற்காக மாதவிடாய் விடுப்பு கொள்கை சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது. அதன்படி மாதத்துக்கு ஒரு நாள் வீதம் ஆண்டுக்கு 12 நாட்கள் மாணவிகள் மாதவிடாய் விடுமுறை எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என தகவல் வெளியாகியுள்ளது.



# பச்சையாக மாறிய தண்ணீர் மேட்டூர் அணையில் திறனூட்டப்பட்ட நுண்ணுயிர் தெளிப்பு

மேட்டூர், டிச.12-

மேட்டூர் அணையில் பச்சையாக மாறிய தண்ணீர், துர்நாற்றத்தை கட்டுப்படுத்த திறனூட்டப்பட்ட நுண்ணுயிர் திரவ கலவை தெளிக்கப்பட்டது. மேட்டூர் அணை நீர்த்தேக்கம் 60 சதுர மைல் பரப்பளவு கொண்டது.

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்யும் மழை, கர்நாடக அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் ஒகேனக்கல் வழியாக மேட்டூர் அணைக்கு வந்தடைகிறது. டெல்டா மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக, டெல்டா மற்றும் கால்வாய் பாசனத்துக்கு நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

அதேநேரத்தில், அணைக்கு நீர்வரத்தும் சற்று அதிகரித்து காணப்படுவதால் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் காவிரி கரையில் விவசாயம் செய்வதற்காக பயன்படுத்திய ரசாயன உரங்கள் பூச்சிக்கொல்லி மருந்து, அழுகிய பயிர்கள் செடி, கொடிகள் பல வகையான தாவரங்கள் ரசாயன மாற்றம் அடைந்து பச்சை நிற படலங்களாக நீர்த்தேக்கம் முழுவதும் மாறி வருகிறது. வெயில் தாக்கம் ஏற்படும் போது நிறம் மாறி துர்நாற்றம் வீசுகிறது.

மேலும், பெங்களூருவில் இருந்து கழிவுகள் தண்ணீரில் கலக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. தற்போது, நிறம் மாறிய தண்ணீரால், தங்கமாபுரிபட்டினம் மற்றும் கவிபுரம், சேலம்கேம்ப், பெரியார் நகர், அண்ணா நகர் உள்ளிட்ட பகுதிகளில் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் கண் எரிச்சல், மூச்சு திணறல் உள்ளிட்ட பாதிப்புகளால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இதுகுறித்து நீர்வளத்துறை அதிகாரிகள் அணை நீர்த்தேக்க பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர். தொடர்ந்து மேட்டூர் அணையில் தேங்கும் கழிவு நீரால் ஏற்படும் துர்நாற்றத்தை கட்டுப்படுத்துவதற்காக நீர்வளத்துறையினர் படகு மற்றும் பரிசல் மூலமாக திறனூட்டப்பட்ட நுண்ணுயிர் திரவ கலவையை தெளித்து துர்நாற்றத்தை கட்டுப்படுத்தி வருகிறனர்.

இவ்வாறு தெளிக்கப்படும் நுண்ணுயிர் கலவையால் நன்மை செய்யும் நுண்ணுயிர் பன்மடங்கு பெருக்கமடைந்து ஆல்கே எனும் பாசிகளை முழுமையாக கட்டுப்படுத்தி இப்பகுதியில் வீசும் துர்நாற்றம் படிப்படியாக குறையும் என்று நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# "பொறுப்பு டிஜிபிக்கே பொறுப்பு டிஜிபியா?" -தமிழக அரசுக்கு தவெக கேள்வி

சென்னை, டிச.12-

தமிழகத்தின் பொறுப்பு டிஜிபி மருத்துவ விடுப்பில் சென்றதால் அவருக்குப் பதில் மீண்டும் ஒரு பொறுப்பு டிஜிபியை நியமிப்பதா என தமிழக வெற்றிக் கழகம் கேள்வி எழுபியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் கொள்கை பரப்புப் பொதுச் செயலாளர் அருண்ராஜ் வெளியிட்டுள்ள பதிவில், "போலீஸ் துறையின் மாண்பை சீர்குலைக்கும் பொறுப்பு துறப்பு முதல்வர் மு.க. ஸ்டாலின். ஏற்கெனவே உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களையும், காவல்துறையின் கண்ணிய மரபுகளையும் மீறி மாநிலத்தின் உயர்ந்த டிஜிபி பதவிக்கு பொறுப்பு டிஜிபியை, கடந்த ஆகஸ்ட் 31ஆம் தேதி நியமித்தார் முதல்வர் ஸ்டாலின்.

அப்போதே இதற்கு தமிழக வெற்றிக் கழகம் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் கண்டனம் தெரிவித்து, நிரந்தர டிஜிபியை நியமனம் செய்ய வலியுறுத்தினோம்.

இந்த நிலையில்... இப்போது போலீஸ் துறையின் மாண்பை மீண்டும் கேள்விக்குறியாக்கும் வகையில், பொறுப்பு டிஜிபி மருத்துவ விடுப்பில் சென்றதால் மீண்டும் ஒரு பொறுப்பு டிஜிபியை முதல்வர் ஸ்டாலின் நியமித்துள்ளார்.

போலீஸ் துறைக்கு பொறுப்பான முதல்வர் இப்படி பொறுப்பற்று நடந்து கொள்வது காவல்துறைக்கும் தமிழ்நாட்டுக்கும் இழைக்கப்படும்



அநீதியாகும்!

கேட்டால் உத்திரபிரதேசத்திலும் பொறுப்பு டிஜிபி தான் என்கிறார்கள். அப்படி என்றால் பாஜக வழியில் தான் நாங்களும் போலீஸ் ராஜ்ஜியம் நடத்துகிறோம் என ஒப்புக் கொள்கிறாரா முதல்வர் ஸ்டாலின்?" என கேள்வி எழுப்பியுள்ளார்.

பின்னணி: தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு பொறுப்பு டிஜிபியாக உள்ள வெங்கடராமனுக்கு நேற்று முன்தினம் சுவாசிப்பதில் சிரமம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இதையடுத்து அவர் கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனைக்குச் சென்றார். அங்கு சில மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து, அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார். டிஜிபியின் உடல் நிலை சீராக இருப்பதாகவும் அவர் ஓய்வு எடுக்கவும் மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

இதையடுத்து பொறுப்பு டிஜிபியான வெங்கடராமன் வரும் டிச.25ம் தேதி வரை மருத்துவ விடுப்பு எடுத்துள்ளார். இதன்காரணமாக டிஜிபி பொறுப்பை கூடுதலாக அபய்குமார் சிங்குக்கு வழங்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. சுமார் 27 ஆண்டுகள் அனுபவமுள்ள இவர், தற்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை டிஜிபியாக உள்ளார். அவருக்கு கூடுதலாக சட்டம் ஒழுங்கு டிஜிபி பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



■ தேனி மாவட்டம், மாவட்ட ஆட்சியரக புதிய கூட்டரங்கில் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் தின விழிப்புணர்வுக் கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் குழந்தை திருமணத்தை தடுத்தல் என்ற கருப்பொருளை கொண்டு நிலைக்காட்சிப் படுத்திய கல்லூரி மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார்.

# தந்தைக்குச் சிலை முக்கியமா? அரசுப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் முக்கியமா? முதல்வருக்கு அண்ணாமலை கேள்வி

சென்னை, டிச.12-

ஊர் ஊராக உங்கள் தந்தைக்குச் சிலை வைப்பது முக்கியமா அல்லது அரசுப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் முக்கியமா? என முதல்வர் ஸ்டாலின் தமிழக பாஜ முன்னாள் தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பி உள்ளார்.



அவரது அறிக்கை: திருவள்ளூர் மாவட்டம் பாலவாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் ஊத்துக்கோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் மொத்தம் 1,000 மாணவ மாணவியருக்கு மேல் படித்து வருகிறார்கள். இந்தப் பள்ளிகளுக்குப் போதிய கட்டடங்கள் இல்லாததால், மாணவ, மாணவியர், மைதானத்தில் தரையில் அமர்ந்து படித்து வருகின்றனர்.

பெற்றோர்களின் கடின உழைப்பில், மாணவர்கள் படித்து சாதனை செய்வதில் எல்லாம், தங்கள் ஆட்சியின் ஸ்டிக்கர் ஒட்டி ஏமாற்றிக் கொண்டிருக்கும் திமுக அரசு, உண்மையில் அரசுப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் கூட செய்து கொடுப்பதில்லை என்பதை, பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் சொந்த மாவட்டம் உட்பட, தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளின் நிலையைப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

ஆட்சிக்கு வந்த உடன், 10,000 பள்ளிகளுக்கு புதிய கட்டடம் கட்டிக் கொடுப்போம் என்று பொய்யான வாக்குறுதி கொடுத்த திமுக, ஆட்சி முடியப் போகும் தருணத்திலும் கூட, எந்த மாவட்டத்தில் எத்தனை பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டியுள்ளார்கள் என்பதைக் கூற மறுத்து வருகிறார்கள்.

இந்த அழகில், சட்டசபை உறுப்பினர்களுக்குக் கடிதம் எழுதப் போகிறேன் என்ற பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் நாடகம் வேறு. 'Out of Contact' முதல்வர் ஸ்டாலின், ஊர் ஊராக உங்கள் தந்தைக்குச் சிலை வைப்பது முக்கியமா அல்லது அரசுப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் முக்கியமா? இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.

# 3.2 லட்சம் ஓட்டுகள் த.வெ.க.,வில் 'கன்பார்ம்': அடையாள அட்டைகளால் கட்சியினர் மகிழ்ச்சி

மதுரை டிச.12-

த.வெ.க., வில் இதுவரை 2.2 லட்சம் பேருக்கு கியூ.ஆர்., கோடுடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரு லட்சம் பேருக்கும் இது வழங்கப்பட உள்ளதால், வரும் தேர்தலில் குறைந்தபட்சம் 3.2 லட்சம் ஓட்டுகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக த.வெ.க.,வினர் கணக்கிடுகின்றனர்.ஆலோசனை



முதல்முறையாக சட்ட சபை தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் களம் இறங்க உள்ளது. அதற்கான முன்னேற்பாடாக, மாநில மாநாடு, நிர்வாகிகளுடன் கலந்துரையாடல், சுற்றுப்பயணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார் கட்சியின் தலைவர் விஜய்.

புதுச்சேரியில் த.வெ.க., பொதுக்கூட்டம் நடத்தியிருக்கும் கட்சியின் தலைவர் விஜய், தேர்தல் ஏற்பாடுகள் குறித்து இன்று சென்னை பனையூரில் உள்ள த.வெ.க., தலைமை அலுவலகத்தில் கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துகிறார். இதை தொடர்ந்து, ஈரோடு மாவட்டத்தில் விஜய் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

இதனிடையே, தமிழக அரசியல் வரலாற்றிலேயே முதல்முறையாக, நிர்வாகிகள், தொண்டர்களுக்கு கியூ.ஆர்., கோடுடன் கூடிய அடையாள அட்டையை த.வெ.க., வழங்கி வருகிறது.

கடந்த மாதம் 1.2 லட்சம் பேருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது. நேற்று த.வெ.க.,வின் 1,921 நகர, ஒன்றிய, பேரூர் மற்றும் அதை சார்ந்த 21,150 கிளை மற்றும் வார்டு கழகங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட பொறுப்பாளர்கள் 1 லட்சத்து 231 பேருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது.

இன்னும் ஒரு லட்சம் பொறுப்பாளர்களுக்கும் கியூ.ஆர்., கோடு உடன் அடையாள அட்டை வழங்கப்பட உள்ளன.

'கியூ.ஆர்., கோடு'

இது குறித்து கட்சி நிர்வாகி கூறுகையில், 'இரு மாதங்களில் மட்டும் கட்சி நிர்வாகிகளுக்கென 2.2 லட்சம் பேருக்கு கியூ .ஆர்., கோடுடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

'அடுத்தடுத்தும் அடையாள அட்டை வழங்கும் பணி மேற்கொள்ளப்படும். கட்சிக்கென 3.2 லட்சம் ஓட்டுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இது கட்சியினரை மகிழ்ச்சியில் ஆழ்த்து உள்ளது' என்றார்.

# முதல்வர் ஆளுநர் இடையே மோதல் : கேரளாவில் 2 பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தரை உச்ச நீதிமன்றமே நியமிக்க முடிவு

டெல்லி, டிச.12-

கேரளாவில் 2 பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்கள் நியமிப்பது தொடர்பாக உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. கேரளாவில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தரை நியமிப்பதில் சிக்கல் எழுந்துள்ளது. அங்குள்ள ஏபிஜே அப்துல் கலாம் தொழில்நுட்பப் பல்கலை., டிஜிட்டல் பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தர்களை நியமிப்பதில் முதல்வர், ஆளுநர் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. துணைவேந்தர்கள் நியமனத்தில் கேரள முதலமைச்சரின் பரிந்துரையை ஆளுநர் ஏற்காததால் பிரச்சனை ஏற்பட்டது. இந்த விவகாரம் தொடர்பாகி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதி பர்திவாலா, நீதிபதி விசுவநாதன் ஆகிய இருவரைக் கொண்ட அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது முதலமைச்சர் பினராயி விஜயனுக்கு ஆளுநர் அளித்த பதிலை சீலிடப்பட்ட கவரில் அட்டார்னி ஜெனரல் வழங்கினார்.



ஆளுநர் பதிலை படிக்க மறுத்த நீதிபதிகள், கேரள முதலமைச்சர், ஆளுநர் பதில்களை ஆய்வு செய்து அறிக்கை தர ஓய்வு பெற்ற நீதிபதி தூலியா குழுவுக்கு ஆணையிட்டனர். மேலும் 2 கேரள பல்கலை.க்கு துணைவேந்தரை நியமிக்க தலா ஒருவரின் பெயரை பரிந்துரைக்க வேண்டும் என்றும் சீலிடப்பட்ட கவரில் பரிந்துரையை அறிக்கையாக டிச.18ல் சமர்பிக்க வேண்டும் என்றும் தூலியா குழுவுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். வழக்கு விசாரணை இடையே, உச்சநீதிமன்றம், கேரள ஆளுநர், முதல்வர் இடையே ஒத்திசைவு ஏற்படாதது வருத்தம் அளிப்பதாகவும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

# நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை: ஒன்றிய அமைச்சர் ராம்தாஸ் அதவாலே

டெல்லி, டிச.12-

நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை என மக்களவை திமுக எம்.பி.க்கள் குழு தலைவர் எம்.பி. டி.ஆர்.பாலு எழுப்பிய கேள்விக்கு ராம்தாஸ் அதவாலே பதில் தெரிவித்துள்ளார். மக்களவை கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்னதாக மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவிடம் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்யக் கோரி இம்பீச்மென்ட் தீர்மான நோட்டீஸை திமுக வழங்கியது. பின்னர் மக்களவை கேள்வி நேரத்தில் திமுக எம்.பி.க்கள் குழு தலைவர் எம்.பி. டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பினார்.




இதற்கு பதிலளிக்கும் வகையில், ஒன்றிய அமைச்சர் ராம்தாஸ் அதவாலே பதில் தெரிவித்தார். அதில், 2018 முதல் 2025 வரை நியமிக்கப்பட்ட 841 நீதிபதிகளில் 3.8 சதவீதம் பேர் மட்டுமே பட்டியலினத்தைச் சேர்ந்தவர்கள். நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படுவதில்லை. 2018 முதல் 2025 ஆம் ஆண்டு வரை நடந்த நீதிபதிகள் நியமனத்தில் பொதுப் பிரிவினர் மட்டும் 76.45% பேர். 7 ஆண்டுகளில், எஸ்.சி பிரிவில் 32 பேர், எஸ்டி பிரிவில் 17, ஓபிசி பிரிவினர் 103 பேர் மட்டுமே நீதிபதிகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

# "எந்த ஷா வந்தாலென்ன?" முதல்வர் ஸ்டாலின் காட்டம்

மயிலாப்பூர், டிச.12-

திமுகவின் 'என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி' 2ம்கட்ட பரப்புரை நேற்று தொடங்கிய நிலையில், மயிலாப்பூர் பகுதி கூட்டத்தில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் பூத் கமிட்டி உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகளை திமுக தீவிரப்படுத்தி வருகிறது. அந்த வகையில் 'தமிழ்நாடு தலைகுனியாதுஎன் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி' என்ற பரப்புரையை திமுக மேற்கொண்டது. முதல்கட்டமாக 68,463 வாக்குச் சாவடிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் போது (எஸ்ஐஆர்) திமுக வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் 6.8 லட்சம் பேர், வாக்குச்சாவடி நிலை அலுவலர் மற்றும் வாக்காளர்களுக்கு உதவிட அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக தற்போது 2ம் கட்ட பரப்புரையை திமுக நேற்று முதல் தொடங்கியுள்ளது. வரும் ஜனவரி 10ம் தேதி வரை இந்த பரப்புரையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர். அதன்படி பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர் கழக செயலாளர்கள் 68,463க்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளுக்கு சென்று சட்டப்பேரவைத் தேர்தலில் அந்தந்த வாக்குச்சாவடி அளவில் வெற்றி பெறுவதற்கான செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.




மேலும், 6.8 லட்சம் பூத் கமிட்டி உறுப்பினர்களை உற்சாகப்படுத்தவும், அணிதிரட்டவும் ஏதுவாக இந்த பரப்புரையை திமுக தலைமைக் கழகம் வடிவமைத்துள்ளது.

அந்தவகையில் மயிலாப்பூர் மேற்கு பகுதி ஆழ்வார்ப்பேட்டை 122வது வட்டம் பாகம் 24ல் நடந்த 'என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி' கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பூத் கமிட்டி உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். அப்போது, 'ஒவ்வொரு பூத்திலும் தெருமுனை கூட்டங்கள், வீடு வீடாகச் சென்று கலந்துரையாடல்கள் மற்றும் வாக்காளர் சரிபார்ப்பு இயக்கங்களில் கட்சியினரை ஈடுபடுத்தி வாக்குச்சாவடியை பலப்படுத்த வேண்டும். அனைத்து திமுக நிர்வாகிகளும் 2021 தேர்தலைவிட கூடுதல் வாக்குகளை தங்கள் வாக்குச்சாவடியில் பெறும் வகையில் பணியாற்ற வேண்டுமென அறிவுறுத்தினார்.

இதுதவிர ஒவ்வொரு வாக்குச்சாவடி உறுப்பினருக்கும் அவரவருக்கான இலக்கையும் முதல்வர் ஸ்டாலின் நிர்ணயித்து கொடுத்தார். இதையடுத்து திமுக வாக்குச்சாவடி உறுப்பினர்கள் ஒரு மாதம் வீடு வீடாக சென்று பரப்புரை மேற்கொள்ளவுள்ளனர். இந்த குழுக்களில் ஒரு மகளிரேனும் கட்டாயம் இடம்பெற வேண்டும் என்று திமுக தலைமை அறிவுறுத்தியுள்ளது.

அறிவாலயத்தில் சலசலப்பு: இதற்கிடையே, திருத்துறைப்பூண்டி முன்னாள் எம்எல்ஏ ஆடலரசன், தனது தொகுதி சார்ந்த பிரச்சினைகளுக்காக முதல்வரை சந்திக்க அறிவாலயத்துக்கு நேற்று வந்தார். அங்கே பாதுகாப்பு பணியில் இருந்த காவலரிடம் முதல்வரை சந்திக்க வேண்டுமென கேட்டார். அவர் நீண்ட நேரம் காத்திருந்தும் முதல்வரை சந்திக்க வாய்ப்பு மறுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த ஆடலரசன், எஸ்சி பிரிவைச் சேர்ந்த ஒரு முன்னாள் எம்எல்ஏவை அனுமதிக்க மாட்டீர்களா? என கோபமாக கத்தினார்.

அவரை தடுத்த காவலரிடம், 'மக்களிடம் ஓட்டு கேட்க நீங்களா வருவீர்கள்? நான் தான் செல்ல வேண்டும். என் தொகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இதை நான் முதல்வரிடம் தெரிவிக்க வேண்டும். என்னை ஏன் தடுக்கிறீர்கள்? என்று ஆவேசத்துடன் பேசிவிட்டு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அட்டையை அறிவாலயம் வாசலில் தூக்கி எறிந்துவிட்டு தனது காரில் ஏறி புறப்பட முயன்றார்.

இதையடுத்து, திமுக நிர்வாகிகள் அவரிடம் பேசி முதல்வர் காரில் ஏறும் போது சந்திக்க ஏற்பாடு செய்தனர், முதல்வரிடம் பல நாட்களாக உங்களை சந்திக்க வந்தேன் ஆனால், அனுமதிக்க மறுக்கின்றனர் என முறையிட்டார். அவரை சமாதானம் செய்துவிட்டு முதல்வர் ஸ்டாலின் புறப்பட்டு சென்றார். இதனால் அறிவாலயத்தில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

அமித் ஷாவுக்கு பதில்: இதற்கிடையே, சமீபத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, 'வரும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக துடைத்து எறியப்படும்' என்று பேசினார். மேலும் தேசிய ஜனநாயக கூட்டணியை பலப்படுத்தவும், வியூகங்கள் வகுக்கவும் அமித்ஷா விரைவில் தமிழகம் வர உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், அமித்ஷாவுக்கு பதில் அளிக்கும் வகையில், முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ''எந்த ஷா வந்தாலென்ன? எத்தனை திட்டம் போட்டாலென்ன? டெல்லி பாதுஷா என்ற நினைப்போடு தமிழகத்துக்கு வர நினைத்தால், ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் எங்களது கருப்பு சிவப்புப் படை உங்களுக்குத் தக்க பாடம் புகட்டும். தமிழகம் என்றைக்குமே ஆணவம் பிடித்த டெல்லிக்கு அவுட் ஆப் கன்ட்ரோல் (Out of Control) தான்''என்று குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டுக்கு பெருமை சேர்க்கும் விண்வெளித்துறை: இஸ்ரோ தலைவர் பெருமிதம்

திருநெல்வேலி. டிச.12-

இஸ்ரோ தலைவர் நாராயணன் நிருபர்களிடம் கூறியதாவது: ககன்யான் திட்டத்தின் முக்கிய நோக்கம், இந்திய ராக்கெட்டில் இந்திய விண்வெளி வீரர்களை விண்ணுக்கு அனுப்பி பத்திரமாக திரும்பக் கொண்டு வருவது தான். இதற்கான ராக்கெட் தயாரிப்பு இறுதிக் கட்டத்தில் உள்ளது.




விண்வெளியில் ஆக்சிஜன், வெப்பநிலை, அழுத்தம் ஆகியவற்றை கட்டுப்படுத்தும் சுற்றுச்சூழல் கட்டுப்பாடு அமைப்பு (ECLSS) சிறப்பாக உருவாக்கப்பட்டு வருகிறது. அதேபோல், ராக்கெட் சிக்கலின் போது வீரர்களை மீட்கும் குழு வெளியேறும் அமைப்பு (CES) வெற்றிகரமாக சோதனை முடித்துள்ளது. இதற்காக ஏற்கனவே 8,000 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

மனிதர்களை ஏற்றிய ககன்யான் விண்கலம், 2027ம் ஆண்டு விண்ணுக்கு அனுப்பப்படும். அதற்கு முன் ஆட்கள் இல்லாத மூன்று ராக்கெட்டுகள் சோதனையாக ஏவப்படும். இந்திய விண்வெளி நிலையம் (Bharatiya Antariksha Station) பிரதமர் நரேந்திர மோடியின் கனவு திட்டமாகும்.

மொத்தம் ஐந்து தொகுதிகளாக அமைக்கப்படும் இந்த நிலையத்தின் முதல் தொகுதி 2028ல் விண்ணுக்கு அனுப்பப்படும். 2035ம் ஆண்டுக்குள் விண்வெளி நிலையம் அமைக்க வேண்டும் என்று பிரதமர் மோடி அறிவுறுத்தி உள்ளார். குலசேகரப்பட்டினம் ராக்கெட் ஏவுதளம் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

2023ல் பிரதமர் அடிக்கல் நாட்டிய இத்திட்டம் இந்தியாவின் இரண்டாவது ராக்கெட் ஏவுதளமாக உருவாகிறது. இது ஸ்ரீஹரிகோட்டாவுக்கு அடுத்த முக்கிய மையமாகும். இந்த ஏவுதளம் 2027 தொடக்கத்தில் செயல்படத் தொடங்கும். இது தமிழகத்துகானதாக அல்லாமல் இந்தியாவுக்கான பெருமை.

சந்திரயான்4 திட்டம் நிலவில் தரையிறங்கி, அங்கிருந்து மாதிரிகளை சேகரித்து பூமிக்குக் கொண்டுவரும் நோக்குடன் நடைபெறுகிறது. இஸ்ரோவின் முயற்சிகள் நாடு பாதுகாப்பிலும், சாதாரண மக்களின் வாழ்விலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்திய விண்வெளித் துறை உலகளவில் பெருமை சேர்த்துள்ளது. இவ்வாறு இஸ்ரோ தலைவர் நாராயணன் கூறினார்.




■ சென்னை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தற்போது வரை இயல்பைவிட 2% குறைவாக பெய்துள்ளது சென்னை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தற்போது வரை இயல்பைவிட 2% குறைவாக பெய்துள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னையில் இயல்பாக 731.9 மி.மீ. மழை பொழியும் நிலையில், தற்போது வரை 715.1 மி.மீ. மழை பெய்துள்ளது.

# இண்டிகோ பிரச்சினையின் பின்புலம் என்ன?

டெல்லி. டிச.12-

இண்டிகோ விமானங்கள் டெல்லி, சென்னை உள்பட பல நகரங்களில் டிசம்பர் 2ல் இருந்து எந்த முன்னறிவிப்பும் இன்றி சேவையை நிறுத்தின. இதனால், உள்நாட்டுப் பயணங்களுடன், வெளிநாட்டுப் பயணங்களும் தடைபட்டன. இந்த நெருக்கடியைப் பிற நிறுவனங்கள் பயன்படுத்திக்கொண்டு கட்டணத்தைப் பன்மடங்கு உயர்த்தின.




விமானிகளின் பற்றாக்குறையே இந்தப் பிரச்சினைக்கு அடித்தளம் எனக் கூறப்படுகிறது. விமானிகள் பணிச்சூழலால் அயர்ச்சிக்கு எளிதில் உள்ளாவதும், அது விபத்துகளுக்கு முக்கியக் காரணியாக இருப்பதாகவும் பேசப்பட்டுவந்த நிலையில், உள்நாட்டு விமானிகளின் பணி நேரத்தைக் குறைப்பது தொடர்பாகப் புதிய விதிமுறைகளை சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் 2024இல் அறிவித்தது.

இதன்படி, விமானிகளின் கட்டாய ஓய்வு வாரத்துக்கு 36லிருந்து 48 மணி நேரமாக அதிகரிக்கப்பட்டது; இரவுப் பணிக்கான நேரமும் குறைக்கப்பட்டது. விமானிகளுக்குச் சாதகமான இத்தகைய மாற்றங்களை இண்டிகோ எதிர்த்தாலும், அவை டெல்லி உயர் நீதிமன்ற உத்தரவு மூலம் அமலுக்கு வந்தன.

தற்போது பிரச்சினை வெடித்திருக்கும் சூழலில், புதிய விதிமுறைகளை அமல்படுத்தும்போது தங்கள் தரப்பில் நிகழ்ந்த தவறான கணிப்புகளும் திட்டமிடலில் ஏற்பட்ட இடைவெளிகளுமே இதற்குக் காரணம் என டிஜிசிஏவிடம் இண்டிகோ கூறியது.

பயணிகளுக்குக் கட்டணத்தைத் திருப்பித் தருவது, மாற்றுப் பயணங்களுக்கு முன்னுரிமை அளித்து முன்பதிவு செய்வது போன்ற பணிகளை முன்னெடுத்திருப்பதாக இண்டிகோ தெரிவித்திருந்தாலும், அத்துடன் இந்தப் பிரச்சினை முடிவுக்கு வர இயலாது.

ஏற்கெனவே, இண்டிகோவின் கோரிக்கைக்கு ஏற்ப ஓய்வு குறித்த விதிமுறை ஜூலை 1, இரவுப் பணியைக் கட்டுப்படுத்தும் விதிமுறை நவம்பர் 1 என இரண்டு கட்டங்களாகவே செயல்படுத்தப்பட்டன. அந்த அவகாசத்தைப் பயன்படுத்தி, இண்டிகோ புதிய விமானிகளைச் சேர்க்காததே தற்போதைய முடக்கத்துக்குக் காரணம் எனப்படுகிறது.

விமானங்களின் நேரம் தவறாமையை அடிப்படையாகக் கொண்ட 'ஆன் டைம் பெர்ஃபார்மன்ஸ்' குறியீடு இண்டிகோ நிறுவனத்துக்கு நவம்பரிலிருந்தே அதலபாதாளத்தை நோக்கிச் சென்றதை டிஜிசிஏ ஏன் கவனிக்கவில்லை, புதிய விதிமுறைகளுக்கு எதிராக இண்டிகோ மறைமுக மிரட்டல் விடுக்கிறதா எனப் பல கேள்விகள் வரிசைகட்டி நிற்கின்றன.

முடக்கத்தைச் சமாளிக்க விமானிகளின் இரவுப்பணி குறித்த கட்டுப்பாட்டுக்குத் தற்காலிக விலக்கு அளிக்குமாறு அந்நிறுவனம் கோரியதை அடுத்து, 2026 பிப்ரவரி 10 வரைக்கும் டிஜிசிஏ அனுமதி அளித்துள்ளது. இந்தப் பிரச்சினையில் தற்காலிகத் தீர்வைவிட, நீண்ட காலப் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வு காண்பதே அரசின் நோக்கமாக இருக்க வேண்டும்



# தங்கத்திற்கு போட்டியாக புதிய உச்சம் தொடும் வெள்ளி:

சென்னை, டிச.12-

சென்னையில் 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.160 அதிகரித்து ஒரு சவரன் ரூ.96,400க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சர்வதேச நிலவரங்களால், நம் நாட்டில் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. தமிழகத்தில் நேற்று முன்தினம் (டிசம்பர் 9) ஆபரண தங்கம் கிராம் 12,000 ரூபாய்க்கும், சவரன் 96,000 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி கிராம், 199 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நேற்று (டிசம்பர் 10) தங்கம் விலை கிராமுக்கு 30 ரூபாய் உயர்ந்து, 12,030 ரூபாய்க்கு விற்பனையானது. சவரனுக்கு 240 ரூபாய் அதிகரித்து, 96,240 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

வெள்ளி கிராமுக்கு 8 ரூபாய் உயர்ந்து, 207 ரூபாய்க்கு விற்பனையானது. வெள்ளி விலை, ஒரே நாளில் கிலோவுக்கு 8,000 ரூபாய் அதிகரித்துள்ளது. இந்நிலையில் இன்று 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.160 அதிகரித்து ஒரு சவரன் ரூ.96,400க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கிராமுக்கு ரூ.20 அதிகரித்து ஒரு கிராம் ரூ.12,050க்கு விற்பனை ஆகிறது. வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.2 உயர்ந்து ஒரு கிராம் ரூ.209க்கும், ஒரு கிலோ ரூ.2,09,000க்கும் விற்பனை செய்யப்படுகிறது. தங்கத்திற்கு போட்டியாக வெள்ளி விலையும் புதிய உச்சத்தை தொட்டு வருகிறது.

வெள்ளிக்கு மவுசு

இது குறித்து, சென்னை தங்கம் மற்றும் வைர நகை வியாபாரிகள் சங்க தலைவர் ஜெயந்திலால் சலானி கூறுகையில், 'தொழிற்சாலைக்கான வெள்ளி பயன்பாடு அதிகரித்து வருகிறது. மேலும், எதிர்காலத்தில் வெள்ளிக்கான தேவை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

இதனால், முதலீட்டாளர்களின் பார்வை வெள்ளி பக்கம் திரும்பியுள்ளது. வெள்ளி மீது அதிக முதலீடு செய்யப்படுகிறது. இது போன்ற காரணங்களால் வெள்ளி விலை அதிகரித்து வருகிறது, என்றார்.



# மதுரை பாரதியார் சிலைக்கு வழிகாட்டி மனிதர்கள் அறக்கட்டளை சார்பில் மாலை அணிவித்து மரியாதை

மதுரை, டிச.12-
மதுரை வழிகாட்டி மனிதர்கள் அறக்கட்டளை சார்பில் மகாகவி பாரதியார் பிறந்த நாளை முன்னிட்டு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

வடக்கு வெளி வீதி சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் அமைந்துள்ள அவரது திருஉருவச் சிலைக்கு அறக்கட்டளை நிறுவனர் மணிகண்டன் மரியாதை செய்தார். பள்ளி தலைமை ஆசிரியர் நாராயணன், உதவி தலைமை ஆசிரியர் அகிலா ண்டேஸ்வரர், நேதாஜி தேசிய இயக்க தலைவர் சுவாமிநாதன், மாற்றம் தேடி அறக்க ட்டளை தலைவர் பாலமுருகன், சமூக ஆர்வலர் கார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், டாக்டர்.தங்கராஜ் சாலை பகுதியில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிட்டங்கியில் உள்ள வாக்கு பதிவு இயந்திரங்களில் முதல் நிலை சரிபார்ப்பு பணிகள் துவக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் பார்வையிட்டார்.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நில அளவை பதிவேடுகள் துறையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதிIV போட்டித்தேர்வின் மூலம் நில அளவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட நியமன ஆணையை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் வழங்கினார்.



■ தேனி மாவட்டம், மாவட்ட ஆட்சியரக புதிய கூட்டரங்கில் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் தின விழிப்புணர்வுக் கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், குழந்தை திருமணத்தை தடுத்தல் என்ற கருப்பொருளை கொண்டு நிலைக்காட்சிப் படுத்திய கல்லூரி மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார்.

# ஆத்தூர் தொகுதியில் மகளிர் உரிமைத் தொகை விடுபட்டவர்களில் 9 ஆயிரம் பேருக்கு இரண்டு தினங்களில் மகளிர் உரிமைத் தொகை கிடைக்கும் என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

## தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நாயகர் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டங்களால் பெண்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது - அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்





சின்னாளபட்டி, டிச.12-
ஆத்தூர் தொகுதியில் மகளிர் உரிமைத் தொகை விடுபட்டவர்களில் 9 ஆயிரம் பேருக்கு இரண்டு தினங்களில் மகளிர்; உரிமைத் தொகை கிடைக்கும் என்று சீவல்சரகு ஊராட்சி ஜெ.புதுக்கோட்டையில் நடைபெற்ற என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு, தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நாயகர் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டங்களால் பெண்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், சீவல்சரகு ஊராட்சிக்கு ட்பட்ட ஜெ.புதுக் கோட் டையில் கெண்டிச்சம்பட்டி, அஞ்சுகம் காலனி, அம்பேத்கர் காலனி, கைத்தறி நெசவாளர் காலனி, ஜெ.புதுக்கோட்டை ஆகிய கிராமங்களுக்கான வாக்குசாவடி முகவர்களான பி.எல்.ஏ.2, பி.எல்.சி, பி.எல்.டி. மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளுக்கான என்வாக்கு சாவடி வெற்றி வாக்குச்சாவடி, தமிழ்நாட்டை தலை குனியவிடமாட்டோம் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆத்தூர் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, ஆத்தூர் தொகுதி திமுக தலைமைக் கழக தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் வாக்குசாவடி முகவர்கள் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் மத்தியில் பேசும்போது வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி மாபெரும் வெற்றி பெற்று நமது கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதல்வராக பொறுப்பேற்பார். காரணம் இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத நலத்திட்டங்களை தமிழகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி சாதனை படைத்துள்ளார். குறிப்பாக பெண்ணினத்தை முன்னேற்றும் வகையில் அவர் செயல்படுத்திய கட்டணமில்லா பேருந்து வசதி, மகளிர் உரிமைத் தொகை, கல்லூரி பயிலும் பெண்களுக்கு உதவித் தொகை, மாணவர்களுக்கு உதவித் தொகை போன்ற நலத்திட்டங்களால் தமிழகத்தில் பெண்கள் முன்னேற்றம் அடைந்துள்ளனர். ஆத்தூர் தொகுதியில் குறிப்பாக கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 1,400 மாணவர்களுக்கும் மாதந்தோறும் உதவித் தொகை கிடைத்து வருகிறது. ஆத்தூர் தொகுதியில் மகளிர் உரிமைத் தொகை கிடைக்கப்பெறாதவர்கள் 10 ஆயிரம் பேர் மனுத்தாக்கல் செய்துள்ளனர். அவர்களில் 9 ஆயிரம் பேருக்கு வருகின்ற 12ம் தேதி முதல் மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப் போகிறது என்று சொன்னவுடன் அங்கு கூடியிருந்த பெண்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆராவாரம் செய்தனர். இதுதவிர இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் குடி தண்ணீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்கு வசதிகள் கேட்டுள்ளார்கள். ஒரு வார காலத்தில் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப் படும் என்றார். கூட்டத்தில் ஒன்றிய திமுக துணை செயலாளர்கள் கலா பச்சை, கருத்தராஜா, முன்னாகள் ஒன்றிய பெருந்தலைவர் கலைச்செல்வி முருகன், மாவட்ட பிரதிநிதி செம்பட்டி கிட்டு, திமுக நிர்வாகி அம்பை ரவி, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் வசந்தகுமார், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் பாறைப்பட்டி வாஞ் சிநாதன், கணேசன், திமுக நிர்வாகிகள் கொண்டப்பன் (எ) ஜோதி, விஜி (எ) விஜீஜயகுமார், கிளைக் கழக செயலாளர்கள் வரதராஜன், சக்திவேல், முருகன், சிவக்குமார், நாகராஜ் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு ஜெ.புதுக் கோட்டை கிராம மக்கள் ஆரத்தி எடுத்து, அதிர்வேட்டு முழங்க பிரமாண்டமான மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.






■ மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் சுபிக்ஷா மகாலில் மாவட்ட காவல்துறை மற்றும் வருவாய்த்துறை இணைந்து நடத்தும் ஒன்றிணைவோம் விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் குத்துவிளக்கேற்றி வைத்து உரையாற்றினார். மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த் மதுரை வருவாய் கோட்டாட்சியர் கருணாகரன் உடன் உள்ளனர்.




■ தேனி மாவட்டம், வடபுதுப்பட்டி நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் முன்னோடி வங்கி சார்பில் நடைபெற்ற கல்விக்கடன் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங்,56 மாணவர்களுக்கு ரூ. 2 கோடியே 59 இலட்சம் கல்விக் கடனுதவிகளை வழங்கினார்கள்



■ தேனி மாவட்ட ஆட்சியரக புதிய கூட்டரங்கில் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் தின விழிப்புணர்வுக் கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், தலைமையில் மனித உரிமைகள் தின உறுதிமொழியினை அரசு அலுவலர்கள், பணியாளர்கள், கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட பலர் ஏற்றுக்கொண்டனர்.

## அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் மதிப்பெண் பட்டியலை பயிற்சியாளர்கள் முதல்வரை நேரடியாக அணுகி பெற்றுக் கொள்ளலாம் தேனி மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங்



தேனி, டிச.12-
அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், தேனியில் 1964 முதல் 2019 வரை பயின்று பயிற்சி முடித்து சென்ற முன்னாள் பயிற்சியாளர்களுக்கு, தேர்ச்சி பெற்றமைக்கான தேசிய தொழிற்சான்றிதழ் (NATIONAL TRADE CERTIFICATE) மற்றும் தோல்வியுற்ற பயிற்சியாளர்களின் மதிப்பெண் பட்டியல்கள் இன்று வரை பெறாமல் உள்ளது. எனவே உரிய பயிற்சியாளர்கள் அலுவலக வேலைநாட்களில் தேனி அரசினர் தொழிற்ப யிற்சி நிலைய முதல்வரை நேரடியாக அணுகி தங்களின் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம்.

அடையாள அசல் தேசிய தொழிற்சான்றிதழ் பெற வருகை தரும் போது, அட்டை / தேர்வு நுழைவுச்சீட்டு (Hall Ticket) /ஆதார் அட்டை சமர்ப்பித்து தேசிய தொழிற்சான்றிதழ் (NATIONAL TRADE CERTIFICATE) மற்றும் இதர அசல் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளலாம் மேலும், விபரங்களுக்கு 9499055765 என்ற தொலைப்பேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.





■ தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு க.உவரி ஊராட்சி, குண்டல் மற்றும் காரிகோவிலில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்

### தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள கூடலூர் N.S.K. P அரசு உதவி பெறும் தனியார் பள்ளியில்

# 12-ம் வகுப்பு படித்து வருபவர் ந.நவதன்யா ஸ்ரீ ஓவியத்தில் மிக ஆர்வம் காட்டி வருகிறார்



தேனி, டிச.12-
தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள கூடலூர் N.S.K. P அரசு உதவி பெறும் தனியார் பள்ளியில் 12 ம் வகுப்பு படித்து வருபவர் ந.நவதன்யா ஸ்ரீ இவர் ஓவியத்தில் மிக ஆர்வம் காட்டி வருகிறார்.

இந்நிலையில் தமிழக அரசு சார்பில் பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் வளர்ச்சிக்கு சிறப்பாக செயல்பட்டதற்கு மிக உயரிய விருதான வெள்ளி யாணை விருதை கடந்த வாரம் மத்திய அரசு வழங்கியது. இது தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்தது.

மேலும், அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கும் நோக்கில் தர்பூசணியில் அவரது உருவத்தையும் யானை விருது பெற்ற சின்னத்தையும் சிற்பமாக செதுக்கினரர். இப்பள்ளி மாணவி தேனி மாவட்டத்தில் நடைபெற்ற காய் கனி, கலை சிற்ப போட்டியில் மாவட்ட அளவில் முதல் இடம் பிடித்தது குறிப்பிட்ட தக்கது. இது பற்றி அப்பள்ளி மாணவி ந. நவதன்யா ஸ்ரீ கூறும் போது கல்வித்துறை அமைச்சர் சிறப்பாக செயல்பட்டு மாணவ, மாணவிகளை பாராட்டி அவர்களை ஊக்குவிக்கும் விதமாக செயல்பட்டு வருகிறார். மேலும் தமிழகத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் மத்திய அரசு விருது பெற்று உள்ளார். அவரை போற்றும் வகையில் இதனை நான் செய்து உள்ளேன் என தெரிவித்தார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000